முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 642**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

02.07.2021, வெள்ளிக்கிழமை

1. கலியுகத்தின் ஞானியே அரங்கா போற்றி
   கண்கண்ட தெய்வமாய் கலியுக மக்களுக்கு
   அழியாமை பெற்று என் சக்தியாக வந்த தேசிகனே
   அரங்கனே உன் தவபலம் மெச்சி
2. மெச்சியே சுப்ரமணியப்பெருமான் யானும்
   மொழிகுவேன் ஞான அறிவுரை ஆசி
   அச்சமிலா அரங்கன் தவமும் தர்மமும்
   அகிலத்தை மாற்றம் செய்வது உறுதிஉறுதி
3. உறுதிகொண்டு மனம் தளரா
   உயர்ஞானி அரங்கன் வழிதொடரும்
   பெருமைமிக்க தொண்டர்படைகள் மூலமாகத்தான்
   பேருலகம் ஞான ஆட்சி அடைய நேரும்
4. நேர்மைகொண்டு அரங்கன் தொண்டோடு
   நீதிமான்களாய் அன்னதான சேவையாற்றி
   வறுமை போக்கும் இந்த மகா சூட்சுமத்தை வழிமொழிந்து உலகமெங்கும் செய்துவர
   வருகவே கலியுக மாற்றம் வள்ளல் அரங்கன் செயலால் ஞானயுகமாக ஆற்றல்பெறும்
5. ஆற்றல்பட அரங்கன் நாமஜெபத்தை செய்து கொண்டு
   அறத்தின்வழி தொடர்ந்து வரவர
   மாற்றங்கள் தானாக இந்த உலகில் நடந்தேறும்
   மக்களெல்லாம் ஞானவான்களாக மாறி சிறக்க நேரும்
6. நேர்மை பட தர்மம் பட நிலவுலகமே
   நிகழ்த்திடுவேன் சமத்துவம்மிக்க சமுதாயம்பட
   ஆறுமுகன் என் வழிபாட்டை செய்துகொண்டு
   அரங்கன் சீடர்களென அடையாளம் கொண்டுவர
7. வருகவே இவர்கள் மூலமாக மாற்றம்
   வடிவேலன் யானும் இனிதே செய்தருள்புரிவேன்
   உரிமைபட அரங்கன் தீட்சை பெற்ற மக்களுக்கு
   உலகமாற்றத்தில் பங்களிப்பு உண்டு

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–